**கவனிக்க.**- *2016.01.08 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1950 - 2016 ජනවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.14**

*1950 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 94 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 97 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, மாசி மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மார்கழி 23.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை வடக்கு | கொக்குவில் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மண்முனை வடக்குப் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு |

01-523

---

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

அறிவித்தலை இரத்துச் செய்தல்

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் முகாமை உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத - வகுதியின் 2 பதவிக்கான (கம்பனிகள் பரிசோதகர்) சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக 2015.06.19 ஆந் திகதிய 1920 ஆம் இலக்க மற்றும் 2015.07.10 ஆந் திகதிய 1923 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் கட்டளைப்படி இரத்துச் செய்யப்படுகின்றன.

கம்பனிகள் பதிவாளர் நாயகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்.

இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2016, சனவரி 15.

1-511

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

தொடர்புடைய அலுவலர் வகைக்குரிய பதவிக்காக பகிரங்க அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்
(செவி, கட்புல அலுவலர், தகவல் அலுவலர், நுண் குறிகாட்டிகள் புகைப்படக் கலைஞர்)

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் தொடர்புடைய அலுவலர் வகைக்குரிய (MN-04) பின்வரும் பதவிகளுக்கு அது தொடர்பில் அவற்றுக்கு எதிரில் உள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக இல. 2 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| செவி, கட்புல அலுவலர் | 2 |
| தகவல் அலுவலர் | 2 |
| நுண் குறிகாட்டிகள் புகைப்படக் கலைஞர் | 2 |

1. **ஆட்சேர்ப்பு முறை.**- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர். இங்கு சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 6 இன்கீழ் குறிப்பிடப்பட்ட) புள்ளியிடும் திட்டத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **வேண்டப்படும் தகைமைகள் :**

(i) ***கல்வித் தகைமைகள்.***- (ஒவ்வொரு பதவிக்கும் உரிய கல்வித் தகைமைகள் அப்பதவிக்கு எதிரே தரப்பட்டுள்ளது).

| பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் |
|---|---|
| செவி, கட்புல அலுவலர் | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞானம் அல்லது கல்வியியலை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றைக் பெற்றிருத்தல் வேண்டும். |
| தகவல் அலுவலர் | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து வெகுசன தொடர்பாடல் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| நுண் குறி காட்டிகள் புகைப்படக் கலைஞர் | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பௌதிகவியலை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். |

கீழே இலக்கம் ii, iii, iv, v இன்கீழ் காட்டப்பட்ட தகைமைகள் மேலே கூறப்பட்ட பதவிகள் மூன்றுக்கும் ஏற்புடையதாகும்.

(ii) ***தொழில்சார் தகைமைகள்.***- குறித்த பதவிக்கான தொழில் சார் தகைமைகள் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் ;

(iii) ***அனுபவம்.***- குறித்த பதவி தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் ;

(iv) ***உடற்றகுதி.***- சகல பரீட்சார்த்திகளுக்கும் அவர்கள் பணியாற்றுவதற்காக வேண்டப்படும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு சிறந்த உள ரீதியான, உடல் ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) ***ஏனைய தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறு வேண்டப்பட்ட அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரி நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகளும் மற்றும் ஏனைய நியதிகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதியத்துடன் கூடியது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி 3 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை இந்த 3 வருட காலப்பகுதிக்குள் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/2014 எனும் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 5 வருடத்திற்குள் குறித்த அலுவலர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும் உரிய தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத வேறு மொழியில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்திற்குள் அரச கரும மொழியில் சித்தி பெறல் வேண்டும் ;

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு அமைவானதாகும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதிற்கு குறையாமலும், 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவி பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 எனும் சம்பள சுற்றறிக்கையின்படி MN-4-2006(A) ரூபா 15,215 - 10 X 215 - 4 X 240 - 7 X 320 - 15 X 360 - ரூபா 25,965 மாத சம்பளத்திற்கு உரியதாகும்.

6. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பின்வரும் புள்ளியிடும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயம் | ஆகக்கூடிய புள்ளி | தெரிவுசெய்வதற்காக கவனத்தில் கொள்ளப் படும் ஆகக் கூடிய புள்ளி |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதன்று |
| தொழில்சார் தகைமைகள் | 20 | |
| அனுபவம் | 25 | |
| மொழித் தேர்ச்சி | 10 | |
| கணினி அறிவு | 20 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்பட்ட செயலாற்றுகை | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **விண்ணப்பதாரியை அடையாளப்படுத்துதல்**.- சகல வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் ஆகியன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் அவர்களது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆள் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்கள் 2016.02.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் "செயலாளர் (பணிப்பாளர்-நிர்வாகம் 06), சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கக்கூடிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தை ஏ4 அளவுத் தாளினைப் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும், 6 தொடக்கம் 9 வரை இரண்டாம் பக்கத்திலுமாக விண்ணப்பப்படிவம் அமைவதுடன், விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தைத் தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்ட வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற அதிகாரி/மாதாந்தம் திரட்டிய சம்பளம் 22,935 ரூபா மற்றும் அதற்கு மேல் வேதனம் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒருவர் ஆகிய இவர்களில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் திணைக்களங்களின் திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

(vi) இதிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் தொலைதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்கள் வழங்குதல்**.- தங்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் விபரங்கள் பிழையானதாக அல்லது பொய்யானதாக இருந்து அது ஆட்சேர்ப்பிற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் உங்களது பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்யப்படும். அத்துடன் அது ஆட்சேர்ப்பின் பின் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய நடவடிக்கைகளுக்கமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. அரசாங்க ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், நிறைவேற்றுத்தர சேவை வகையின் தரம் III இற்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் நிபந்தனைகள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

அனுர ஜயவிக்ரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

'சுவசிரிபாய',
இல. 385,
வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செவி, கட்புல அலுவலர், தகவல் அலுவலர், நுண் குறிகாட்டிகள் புகைப்படக் கலைஞர் ஆகிய பதவிகளுக்கான பகிரங்க ஆட்சேர்ப்பு**

வதிவிட மாவட்டம் : [ ]

விண்ணப்பிக்கும் பதவி : [ ]

1. 1.1 விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : திரு./திருமதி/செல்வி :----.
(உ + ம் : Mr./ Mrs/ Miss SILVA A. B.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி - தனிப்பட்டது (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.2 முகவரி - தனிப்பட்டது (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 முகவரி - அலுவலகம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.4 முகவரி - அலுவலகம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ கூட்டுத்தாபனம் ஒன்றில் பணிபுரியும் அலுவலர்கள் அவர்களின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதாவது மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

5. 5.1 பால் (ஆண்/பெண்) :----.

5.2 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்டது) :----.

5.3 தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

6. தகைமைகள் (விளம்பர அறிவித்தலில் பிரிவு 2 இன்கீழுள்ள தகைமைகள்) :

கல்வித் தகைமைகள் :----.
அனுபவம் :----.

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**
இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதி மொழிகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் பொய் யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பிற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும் எனவும், பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின் கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவித நட்ட ஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................... என்பவரைத் தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும், அவர் ............................. ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தனை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

9. **திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்களுக்கு மாத்திரம்) :**

இந்த விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ............................. இத்திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் ....................... ஆந் திகதியிலிருந்து பணியாற்றுகிறார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான/ தற்காலிகமான பதவி ஒன்றினை வகிக்கின்றார். கடந்த .............................. வருட காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும், அவர் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை (எச்சரிக்கை தவிர) என்றும், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள பதிவேடுகளில் சரிபார்க்கப்பட்டது என்றும், அதன்படி அவை அனைத்தும் சரியானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்றும், ........................ ....... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)
திகதி :----.

1-570

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசசேவை ஆணைக்குழு

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014

2015.09.01 ஆந் திகதிய 1930/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, 2016, ஏப்பிறல் மாதம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். 2014.12.31 ஆந் திகதியன்று-

(i) இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரிவின் (MN-03 2006A) I ஆவது வகுப்பில் குறைந்தது 5 வருடங்களுக்குத் தொடர்ச்சியாக மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்து உரிய சம்பள ஏற்றங்கள் 5 இனைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள்,

(ii) தரமுயர்வு வழங்கப்பட்ட தினத்திற்கு கிட்டிய 5 வருட காலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்திய அலுவலர்கள்

இப்பரீட்சைக்காக விண்ணப் பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

*2.* விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும்.

(MN-7-2006-A *4 ஆம் படிமுறை)*

*ரூபா 21,125-8 x 365 - 18 x 500 - ரூபா 33,045*

*3.* **இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும் :**

(i) இப்பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை தொழில்நுட்ப சேவையில் 2013.07.03 ஆந் திகதியிலிருந்து 2013.12.31 ஆந் திகதி வரை மற்றும் 2014.01.01 ஆந் திகதியிலிருந்து 2014.12.31 ஆந் திகதி வரை ஒவ்வோர் திணைக்களத்திலும் மற்றும் அமைச்சிலும் அவ்வந்த பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புதல் ;

(ii) விசேட வகுப்பிற்கு இணைத்துக்கொள்வதற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டியது 2013.07.03 ஆந் திகதியிலிருந்து 2013.12.31 ஆந் திகதி வரை மற்றும் 2014.01.01 ஆந் திகதியிலிருந்து 2014.12.31 ஆந் திகதி வரை காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளை நிரப்புவதற்கு மட்டுமேயாகும் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 4 அல்லது அதனைவிட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் 25% (சதவீதம்) ஆகவும், சேவை மூப்பு மற்றும் மற்றும் திறமையின் அடிப்படையிலேயே பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் 75% (சதவீதம்) ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 3 ஆக இருக்கும்போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் 33.33% (சதவீதம்) மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையிலேயே பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் 66.66% (சதவீதம்) ஆகவும் இருக்க வேண்டும் ;

(iv) விசேட வகுப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 3 இனைவிட அதிகரிக்குமாயின் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் ;

(v) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தியடைபவர்கள் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தேவைகளை பூரணப்படுத்தப்பட்டதாக அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரிசோதனைக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட வகுப்பிற்கான பதவியேற்றம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் ;

(vi) வெற்றிடங்களை நிரப்பும் சந்தர்ப்பத்தில் விண்ணப்ப தாரிகளுக்கிடையில் ஒவ்வோர் வெற்றிடங்களும் ஏற்பட்ட தினத்திற்கு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களின் திறமைகளின் ஒழுங்கிற்கு ஏற்ப குறித்துரைத்த பதவியேற்றத்திற்காக கவனத்திற்கொள்ளப்படும்.

*4.* (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அதேவேளை பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும் ;

(ii) இச்சட்டங்களை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்படவேண்டிய நிலை உருவாகும். பரீட்சார்த்திகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானியின் ஆரம்பத்தில் தனியாக பிரசுரிக்கப் பட்டுள்ளது.

*5.* இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர் சுயமாக விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2016, பெப்புருவரி 15 ஆந் திகதிக்கு முன்னர், பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*6.* ***ஆள் அடையாள அட்டைகள்.-*** பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் அடிப்படையில் இரத்துச்செய்யப்பட முடியும்.

*7.* **விண்ணப்பப்படிவம்.-** (i) "ஏ4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 5 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் தோற்றும் மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக் கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அதனால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது சாலவும் சிறந்ததாகும்.

(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iii) முதற்தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் தோற்றும் அலுவலர்கள் 500 ரூபாவைப் பரீட்சைக் கட்டணமாக 2003-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்புக்கு யாதேனும் தபால் அலுவலகத்தில் அல்லது உப தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும்.

இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

8. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக் கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், உள்வாங்கப்பட்டிருக்கும் அரச சேவை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்தலும், திணைக்களத் தலைவரின் பரிந்துரையும் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அலுவலர்கள் அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் கூடாது.

விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப் பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு செய்தித்தாள்களில் அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அவ்அறிவித்தலில், பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தது 5 நாட்களுக்கு முன்னர் தங்களது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தியாக இருப்பின் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு அது தொடர்பாக "பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை"யிடம் விசாரணை செய்ய வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும்போது விண்ணப்பதாரி தாங்கள் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினையும் திருத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின் மேலுள்ள விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத் தினைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரணை செய்யும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதாவதொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தாங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்தல் குறித்து ரைக்கப்பட்டிருப்பின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டினைத் தயார்படுத்தி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

9. மேலே (8) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இப்பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. **பரீட்சை நடைமுறைகள்**.- (i) I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) உளச்சார்புப் பரீட்சை.- நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்
(2) முகாமைவத்துவம்.- நேரம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு.- உளச் சார்பு-பாட இலக்கம் (1).- தனக்கு ஒப்படைக்கப்படும் நடவடிக்கைகள் சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்திறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்பவற்றினை பெற்றிருக்கின்றாரா என்றும் மற்றும் அவற்றினைப் பிரயோகித்தலின்போது உச்ச திறமையினைக் காட்டுவதனை அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும்.

இவ்வினாப்பத்திரத்தில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு.- முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :
திட்டமிடல்
தீர்மானம் எடுத்தல்
தீர்மானம் எடுக்கும் செயன்முறைகள்
ஒழுங்கமைப்பு
பதவிநிலைப்படுத்தல்
செயற்படுத்துதல்
ஊக்குவிப்புச் செயன்முறை
தலைமைத்துவக் கட்டுப்பாடு
நிர்வாகக் கொள்கைச் செயன்முறை

(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

12. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதிகளை மீறின் அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார்.

13. பரீட்சை பற்றிய இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2015, திசெம்பர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலகப் பயன்பாட்டுக்குரியது)

இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014

Limited Competitive Examination for Promotion of the Officers in Grade I of Sri Lanka Technological Service to Special Grade - 2014

1\. (அ) பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
(சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

நீங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது மாகாண அரச சேவையிலா, அவ்வாறல்லாதுவிடின் எவ்வகையான அரச சேவையில் என்பது-

(நீங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ள அரச சேவைக்குரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.) ☐

(மேல் மாகாண அரச சேவை - 1/ மத்திய மாகாண அரச சேவை - 2/ தென் மாகாண அரச சேவை - 3/ வட மாகாண அரச சேவை - 4/ கிழக்கு மாகாண அரச சேவை - 5/வடமேல் மாகாண அரச சேவை - 6/வடமத்திய மாகாண அரச சேவை - 7/ஊவா மாகாண அரச சேவை - 8/ சப்பிரகமுவ மாகாண அரச சேவை - 9/மத்திய அரசின் அரச சேவை - 10)

(ஆ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA, H. M. S. K.)

(ஈ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(உ) அலுவலக முகவரி (இம்முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்)
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஊ) பால் (ஆண்-0, பெண்-1) : ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(எ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஏ) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2\. நீங்கள் பணிபுரியும் திணைக்களம் :----.

3\. பதவிப் பெயர் :----.

4\. 2014.12.31 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5\. (i) பிறந்த திகதி-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2014.12.31 ஆந் திகதியன்று வயது-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

| |
|---|
| பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லாதவிடத்து பரீட்சைக் கட்டணமான 500 ரூபாவைச் செலுத்திய பற்றுச் சீட்டினை இவ்விடத்தில் நன்றாக ஒட்டுக. (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
செலுத்திய தொகை :----.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேல்குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அல்லது தமது பிரதேச அலுவலகத் தலைவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/ செல்வி .................................................. என்பவர் ...... .............................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பனையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதில் இருந்து விடுதலை என்றும் அல்லது குறித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் மேற்படி பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை) :----.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ்**

(i) இவ்விண்ணப்பதாரிக்கு எதிராக நடாத்தப்படும் அல்லது நடாத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக திணைக்களத் தலைவரின் பரிந்துரை

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

(ii) மேலே இல. 1 முதல் 5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும அவர் தகுதியானவர் என்பதையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார் தேவையில்லை என்றும் அல்லது உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், கையொப்பமும் திகதியும் இடப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.
(உத்தியோகபூர்வ முத்திரை).

திகதி :----.

**குறிப்பு**.- உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று பரீட்சார்த்தியின் தனிப்பட்ட கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றைய பிரதி காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.



## இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014 (2016)

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் உள்ள சொற்பதங்களான-

(அ) 'செயலாளர்' என்பதன் மூலமாகக் கருதப்படுவது, "பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்" ஆவார்.

(ஆ) "சேவை" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, இலங்கை நிர்வாக சேவை ஆகும்.

2. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

எழுத்துப் பரீட்சை.- இப்பரீட்சையானது பின்வரும் நான்கு (4) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

(1) பொது விவேகம் ;

(2) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் ;

(3) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) ;

(4) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது.

***பரீட்சை நடைபெறும் திகதி***.- இப்பரீட்சையானது 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கொழும்பு நகரில் மட்டும் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கோ இரத்துச் செய்வதற்கோ செயலாளருக்கு உரிமையுண்டு.

***நேர்முகப் பரீட்சை***.- எழுத்துப் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டவாறு போதுமான உயர் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளுக்கு பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்கான திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைப் படி செயலாளரினால் நிர்ணயிக்கப்படும்.

3. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 28 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

4. சேவை நிபந்தனைகள் :

4.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு மற்றும் 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள் ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக்கோவையின் நிதிப்பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பரீட் சார்த்தி ஒருவர் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப் படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 நியமனமானது ஒரு வருட பதில் கடமையாற்றும் காலப்பகுதி ஒன்றுக்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற எவரேனும் விண்ணப்பதாரிகள் நியமனத்தினை இரத்துச்செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ். எல். 1-2006 சம்பளத் தொகுதியானது இச்சேவைக்குப் பிரயோகிக்கப்படுவதுடன் கூறப்பட்ட சம்பளத் தொகுதிக்கு உரித்துடைய சம்பள அளவுத்திட்டமானது பின்வருமாறு :

ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்)

6. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி**.- (அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சிறந்த ஒழுக்க நடத்தையுடனும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்

(ஆ) ***கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்***.- (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்என்-2-2006 அல்லது அதற்கு மேற்பட்ட எம்என் சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்எல்-1-2006 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/ பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ii) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்என்-2-2006 அல்லது அதற்கு மேற்பட்ட எம்என் சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்எல்-1-2006 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/ பதவியில் குறைந்தபட்சம் பத்து (10) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல்.

**குறிப்பு :**

(1) பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது 2014.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும் ;

(2) மேற்குறிப்பிடப்பட்ட சேவைக்காலத்தைக் கணிப்பிடும்போது அரசாங்க சேவையில் அத்துடன்/ அல்லது மாகாண அரச சேவையிலுள்ள தொடர்ச்சியான சேவைக்காலத்தின் மொத்தமானது கருத்திற்கொள்ளப்படும்.

(இ) ***வயது மற்றும் பூர்த்திசெய்திருக்க வேண்டிய ஏனைய தகைமைகள்***.- (i)2014.12.31 ஆந் திகதியன்று வயதெல்லை 53 வருடத்திற்கு மேற்பட்டதாக இருத்தலாகாது ;

(ii) மேலே 6 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சேவை/ பதவி ஒன்றில் நிரந்தரப் பதவியினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) உடன் முன்வரும் 5 வருடங்களில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது ;

(iv) உடன் முன்வரும் 5 வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்களை குறித்த திகதியில் உழைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) ***தகைமைகள் பற்றிய வரையறைகள்***.- (i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு (2) தடவைகளுக்கு மேல் தோற்ற எந்தவோர் பரீட்சார்த்தியும் அனுமதிக்கப்படமாட்டார். (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற்கொள்ளப்படுவதில்லை.)

(ii) இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவைப்படுத்தப்படும் தகைமைகள் 2014.12.31 ஆந் திகதியளவில் முழுமையாகப் பூர்த்தி செய்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

7. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் 1,000 ரூபாவாக இருக்கும். இது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டின் ஏதேனும் தபாலகத்திற்குப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கட்டணமானது மீளச்செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்திருப்பது உகந்ததாக இருக்கும்.

8. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறி வித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அதனை தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். 1 முதல் 2.12 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத் திலும், 3 தொடக்கம் 4(ii) வரையானவை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது விசேடமாகக் குறிப்பிடப்படுகின்றது. கணினியில் தயாரிக்கப்படும் விண்ணப்பம்/ தட்டச்சு விண்ணப்பங்களும் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட முடியும். விண்ணப்பம் பரீட்சார்த்தியினாலேயே தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதைச் சரி பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2016, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014 (2016)" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

(ஈ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) ஒவ்வொரு அம்சமும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் தபாலில் தொலைந்துவிட்ட தாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் அனுமதி அட்டை அனுப்பப்படவுள்ள ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையதாகும். விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம், பற்றுச்சீட்டு என்பவற்றின் பிரதி மற்றும் கடிதம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றினை வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**- (அ) சகல விதத்திலும் பூர்த்திசெய் துள்ள விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற சகலருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப்பத்திரம், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முன்கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களைப்பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

**குறிப்பு.**- பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்று கருதப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*11.* ***பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை.***- எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வேண்டுமென்றே பிழையான தகவல்களை அளித்துள்ளார் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் அரச சேவையிலிருந்து பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

*12.* இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப் படல் வேண்டும்.

*13.* **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி மூலம் :-**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தான் சேவைக்குச் சேர்வதற்காகத் தகைமைபெற்ற பட்டப்படிப்பினை பூர்த்திசெய்த மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) பரீட்சார்த்தி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

*14.* **ஆட்சேர்ப்பு முறை :**

*14.1* ***எழுத்துமூலப் பரீட்சை.***- பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சைத் தாள்கள் 4 இனை உள்ளடக்கியிருக்கும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :-

| | பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது விவேகம் | 100 | 50 |
| 2 | இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் | 100 | 50 |
| 3 | பொது நிர்வாகத் துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) | 100 | 50 |
| 4 | பொது நிர்வாகத் துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்க பூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது) | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

*14.2* ***பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.***- (i) நேர்முகப் பரீட்சையானது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என இரண்டு (2) பகுதிகளைக் கொண்டுள்ளது :-

(அ) பொது நேர்முகப்பரீட்சை :

(i) மேற்படி பந்தி 6 இல் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்றும் தகுதி தொடர்பான வரையறைகளுக்கு விண்ணப்பதாரிகள் இணங்கியொழுகின்றனரா என்றும் உறுதிப்படுத்துவதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சைச் சபைக் குழுவால் பரீட்சார்த்திகளின் முகாமைத்துவத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள், மற்றும் ஆளுமை என்பவற்றை அளவிடுவதற்கு பின்வரும் நடைமுறையுடன் ஒத்திசைவாக நடாத்தப்படும். இந்நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

| | விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | முகாமைத்துவத் திறன் | 10 |
| 2 | தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3 | தொடர்பாடல் திறமை | 05 |
| 4 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

(ii) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது ஐம்பது (50%) புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் சகல பாடங்களிற்கும் மொத்தமாக உச்ச புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவர். தகுதிபெற்ற பரீட்சார்த்திகளில் நிரப்பப்பட எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களுக்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்யப் படுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த எண்ணிக்கைக்குச் சமனானதோர் எண்ணிக்கையானோர் மற்றும் எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையினைத் தொகையிடவில்லையாயின் அவ்வாறு தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் அத்தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(iii) தகைமைகளைப் பரீட்சிப்பதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னராக பொது நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும் என்பதுடன் அங்கே எதுவித புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்பதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதனை உறுதிப்படுத்திய விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதிபெறுவர். குறித்த சில எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதிப்படுத்தப்படாவிட்டாலுங்கூட ஏனைய பரீட்சார்த்திகள் அவ்வாறு தகுதிப்படுத்தப்படாதவர்களின் இடத்துக்காக பொது நேர்முகப் பரீட்சைக்கு மீண்டும் அழைக்கப்பட மாட்டார்கள்.

(iv) நிலவும் வெற்றிடங்களுக்கிணங்க நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில்பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம்பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்கவும்.**- நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தலானது நியமனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற சகல தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படலாகாது.

14.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

15. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்** :

(1) பொது விவேகம்.- எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள், இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 1 1/ 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக் களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(2) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும்.- இலங்கை மற்றும் உலகளாவிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், முன்னுரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க விடைகளுக்கான வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், வினாக்கள் மற்றும் கட்டுரைகள், வினாக்கள் என்பவற்றைக் கொண்டி ருக்கும்.

(3) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை).- அரசாங்க சேவையில் வேறுபட்ட சுற்றுச்சூழல்களில் தோன்றக்கூடிய சிக்கலொன்றை அல்லது ஒரு சிலவற்றைத் தொடர்புபடுத்திக் கொண்டு உருவாக்கப்பட்ட சம்பவ மொன்றை/ சம்பவங்களை பரீட்சார்த்தியிடம் முன்வைத்து பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆக்கபூர்வமான சிந்தனைச் சக்தியையும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஆற்றலையும் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுடன் தொடர்புடையதாக அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்ததாக அளவிடுதலே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க விடைகளுக்கான வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், வினாக்கள் மற்றும் கட்டுரைகள், வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

(4) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர் பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது).- தரப்பட்ட தலையங்கங்கள்/ தொனிப் பொருள்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்யும் ஒரு தலையங்கம்/ தொனிப்பொருட்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துக்களைத் தனது

சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2015, திசெம்பர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014 (2016)**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF THE SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2014 (2016)

1. மொழி மூலம் :
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி மூலத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :-----.

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.7 பால் (ஆண் - 0, பெண் - 1) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.9 விவாக நிலை :
(விவாகமாகாதவர் -1, விவாகமானவர் - 2) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.10 இனம் (சிங்களவர் -1, தமிழர் - 2,
இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4,
ஏனையோர் - 5) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.11 பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

2.12 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/ தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/ நேர்முகப் பரீட்சையினைத் தாங்கள் சித்தியெய்திய மொழி மூலத்தினைக் குறிப்பிடவும் :----.

4. (i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா ? :----.

(அ) 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு வயது :----.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்.- வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6(ஆ) இற்கமைய பந்தி 6 (ஆ) I அல்லது (ஆ) II இன்கீழ் பரீட்சார்த்தி தகைமை பெற்றுள்ளாரா என்பதைக் குறிப்பிடவும் :----.

பட்டம் பெற்ற திகதி :----.
பல்கலைக்கழகம்/நிறுவகம் :----.
பதிவிலக்கம் :----.
உள்வாரி/வெளிவாரி :----.
பட்டம் :----.
பாடங்கள் :----.
வகுப்பு :----.
மேல்/கீழ் :----.
பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி :----.
பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் : ----.

(இ) சேவை/ தரம் ....................................... தங்களின் சேவை/ தரம் [வகுப்பு, தரம் அல்லது தொகுதி (ஏதேனும் இருப்பின்) சுட்டிக்காட்டப்படல் வேண்டும்] : ----.

தற்போதைய பதவி :----.
கூறப்பட்ட பதவியானது அரச சேவைக்கு அல்லது மாகாண அரச சேவைக்கு உரியதா ? :----.
தரம் :----.
வகுப்பு/தொகுதி :----.
பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
கூறப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ----.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் : ----.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக தகைமை பெறுவதற்கு சில சேவைகள் தங்களுக்கு ஏற்புடைய தாயின் சேவையில் கூறப்பட்ட காலப்பகுதியின் விபரங்கள் (முனைப்பானதும் திருப்திகரமானதும்) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

| சேவையின் பெயர்/தரம் | பொ. நி. சுற்ற றிக்கைக்கமைய ஏற்புடையதான சம்பளக் குறியீடு உதாரணம் : MN2-2006(A) | நியமனத் திகதி |
|---|---|---|
| (1) .............. | ........................... | ..................... |
| (2) .............. | ........................... | ..................... |
| (3) .............. | ........................... | ..................... |
| (4) .............. | ........................... | ..................... |
| (5) .............. | ........................... | ..................... |

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள்/ தரங்களின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறான முனைப்பானதும் திருப்திகரமானது மான மொத்த சேவைக்காலம் :----.

5. பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழராதவாறு ஒட்டவும் :

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

6. **பரீட்சார்த்தியின் உறுதியுரை** :

2014.12.31 ஆந் திகதிக்கு முன்வரும் ஐந்து வருட காலப்பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 (ஆ) இற்கமைய 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) நான் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அமைய இம்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................................. ஆந் திகதிய ........................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னராயினும் பரீட்சையின்போதும் அல்லது பரீட்சைக்குப் பின்னராயினும் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

7. திணைக்களத் தலைவரின் சான்றுரை (தனிப்பட்ட கோவை யினைச் சரிபார்த்து) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......... ............................... எனும் விண்ணப்பதாரர் மத்திய அரசாங்கம்/ ...................................... மாகாண அரசாங்கத்தின்கீழ் ................. ............................. அமைச்சு/திணைக்களத்தில் .......................... .............. என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும், 2014.12.31 ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்றும் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6(ஆ) இற்கமைய ............................. (ஐந்து/ பத்து) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

1-618

---

## இலங்கை நிர்வாக சேவையில் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2016)

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்ற பதம் ''பொது நிர்வாக அமைச்சின் விடயப் பொறுப்பு செயலாளர்'' எனப் பொருள்படும். ''சேவை'' என்ற பதம் வேறு எந்தவிதத்திலும் விசேடமாக குறிப்பிடப் படாத சந்தர்ப்பத்தில் ''இலங்கை நிர்வாக சேவை'' எனப் பொருள்படும்.

2. இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.02.15 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்பான கடிதம் தபாலின்போது தொலைந்த அல்லது தாமதமடைந்ததாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற்கொள்ளப்படுவதில்லை. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்தலினால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

***எழுத்துப் பரீட்சை***.- இப்பரீட்சை பின்வரும் ஐந்து (5) வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(i) பொது விவேகம் ;
(ii) இலங்கையின் சமூக, பொருளாதார அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள் ;
(iii) சர்வதேச போக்குகள் ;
(iv) முகாமைத்துவ விவேகம் ;
(v) ஆக்கபூர்வ, பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள்

***பரீட்சைத் திகதி***.- இப்பரீட்சை 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கொழும்பு நகரில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

***நேர்முகப் பரீட்சை***.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள் களுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளுக்காக பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய செயலாளர் தீர்மானிப்பார்.

3. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 104 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதி களின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) விதிக்கப்பட் டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதும், வருங்காலங் களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் மற்றும் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றுக்கமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானது.

4.3 நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப் பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது சித்தியெய்தப்படல் வேண்டும்.

4.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி இரத்துச்செய்ய இடமுண்டு.

5. **மாதாந்த வேதன அளவுத்திட்டம்**.- 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்.எல். 1-2006 சம்பளத் தொகுதியானது இச்சேவைக்கு பிரயோகிக்கப்படுவதுடன் கூறப்பட்ட சம்பளத் தொகுதிக்கு உரித்துடைய சம்பள அளவுத்திட்டமானது பின்வருமாறு.- ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்)

6. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்**.- (அ) (i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ;

(ii) சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் ;

(iii) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்***.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் பட்டத்தினை வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும்.

(இ) ***வயது***.- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று இருபத்திரண்டு (22) வயதிற்கு குறையாதிருப்பதோடு இருபத்தெட்டு (28) வயதினை அடையாதவராக இருத்தல் வேண்டும். (அதற்கமைய வயது தொடர்பான தகைமையைப் பூர்த்தி செய்யப்படுவது விண்ணப்பதாரி 1994.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்திருப்பதுடன் மற்றும் 1988.02.15 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.)

(ஈ) ***தகைமைகள் பற்றிய வரையறைகள்***.- (i) திறந்த போட்டிப் பரீட்சையில் (2) இரு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது. (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம்

III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற்கொள்ளப்படுவதில்லை.)

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்குத் தேவைப்படும் தகைமைகள் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமோர் மத போதகராக பதவி வகிக்கும் எந்தவொரு நபருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டின் ஏதேனும் தபாலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டப் படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டணமானது மீளச் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை வைத்திருப்பது உகந்ததாக இருக்கும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டுமென்பதுடன் அது 8 1/2" x 12" (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம், பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். 1 தொடக்கம் 2.12 வரையிலான விபரங்கள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3 தொடக்கம் 7 வரையிலான விபரங்கள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப் பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்பு கிறாரோ அம்மொழி மூலத்தில் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்று முகவரியிடப்பட்டு 2016.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2016)" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

(ஈ)விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவுபெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. இலங்கை பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பியதும், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை அனுப்புவதற்காக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையதாகும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களினை மெய்ப்பிப்பதற்கு விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு என்பவற்றின் பிரதி மற்றும் கடிதம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றினைத் தயாராக வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்**.- (அ) சகல விதத்திலும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முன்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப் படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் விதி ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இந்த விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை.**- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் எதேனுமொரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி மூலம் :-**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம்மொழி மூலம் எழுதி சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந் திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக் கப்பட்ட "தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டம்" எனும் சொற்றொடர் 6 (ஆ) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையைக் குறிக்கும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங் களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

14. **ஆட்சேர்ப்பு முறை :**

14.1 ***எழுத்துமூலப் பரீட்சை.***- கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய ஐந்து (5) வினாப்பத்திரங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | பாடம் | புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது விவேகம் | 100 | 50 |
| 2 | இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள் | 100 | 50 |
| 3 | சர்வதேச போக்குகள் | 100 | 50 |
| 4 | முகாமைத்துவ விவேகம் | 100 | 50 |
| 5 | ஆக்கபூர்வ பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 100 | 50 |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும் :

14.2 பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.- நேர்முகப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. அதாவது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை–

(அ) பொது நேர்முகப் பரீட்சை :

(i) மேற்படி இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பரீட் சார்த்தி பூர்த்திசெய்துள்ளாரா என்றும் அத்தகைய தகைமைகள் அதில் காட்டப்பட்ட குறிப்புரைகளுக்குள் அமைகின்றனவா என்றும் சரி பார்ப்பதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் பரீட்சார்த்திகளின் முகாமைத்துவ ஆற்றல், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆளுமை என்பனவற்றை அளவிடுவதற்காக கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். இங்கு பெற்றுக்கொள்ள முடியுமான உச்சப் புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

| | விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | முகாமைத்துவத் திறன் | 10 |
| 2 | தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3 | தொடர்பாடல் திறமை | 05 |
| 4 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

(ii) ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கு ஐம்பது (50%) புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து சகல பாடங்களிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். தகுதி பெற்ற பரீட்சார்த்திகளில் எதிர்பார்க்கப்படும் மொத்த ஆட்சேர்ப்பு வெற்றிட எண்ணிக்கையினர் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மொத்த ஆட்சேர்ப்பு வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையானோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையினை தொகையிடவில்லையாயின் அவ்வாறு தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் அத்தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேற்படி எண்ணிக்கைக்குச் சமனற்றதாகக் காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் மேற்படி தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு இங்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்காக தகைமை பெறுவர். மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளிலிருந்து குறிப்பிட்டதொரு தொகை கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்காக தகைமை பெறாவிடினும் அவ்வாறு தகைமை பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீண்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட மாட்டார்கள்.

(iv) நிலவும் வெற்றிடங்களுக்கிணங்க நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம்பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்க வேண்டியது**.- நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதனால் நியமனம் வழங்கப்படுவதற்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

14.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

15. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்**.- (1) ***பொது விவேகம்***.- எண் ரீதியான, மொழி ரீதியான மற்றும் உருவ ரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் இடைத்தொடர்புகள் என்பவற்றுடன் தொடர்புபட்டதாக முன்வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்க விவேகம், பொருள்கோடல் திறன் என்பவற்றை ஏனையவற்றுடன் தொடர்புபடுத்தும் ஆற்றல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் உளச்சார்பு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 1 1/ 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(2) ***இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், பின்னணி மற்றும் அதன் போக்குகள்***.- இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் தொடர்பான விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் நிலைமைகளுடன் ஆக்கபூர்வமாகவும் பகுப்பாய்வுடனும் விமர்சன ரீதியாகவும் சிந்தனை செய்யும் ஆற்றல் முன்னுரிமையினைத் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்வுகூறும் ஆற்றல் தொடர்பாக பரீட்சார்த்தியின் ஆற்றல்களை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள் இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(3) ***சர்வதேச போக்குகள்***.- சர்வதேச சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் தொடர்பான விடய ஆய்வு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் நிலைமைகளுடன் ஆக்கபூர்வமாகவும், பகுப்பாய்வுடனும் விமர்சன ரீதியாகவும் சிந்தனை செய்யும் ஆற்றல் முன்னுரிமையினைத் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்வுகூறும்

ஆற்றல் தொடர்பாக அல்லது பரீட்சார்த்தியின் ஆற்றல்களை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(4) **முகாமைத்துவ விவேகம்.**- சிக்கல்களையும் அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிதல், தீர்மானங்களை மேற்கொள்ளல், ஆளிடைத் தொடர்புகளைப் பேணுதல், தொடர்பாடல் திறன், சுய ஒழுக்கநெறிக் கொள்கைகள், உபாய மார்க்கங்களை வகுத்தல் என்பவற்றில் பரீட்சார்த்தியின் ஆற்றலையும் மற்றும் கருத்துரு மற்றும் புலமை அம்சத்திலுள்ள பிரச்சினைகள் மற்றும் சூழ்நிலைகளின் சூழமைவில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் ஆற்றலையும் அளவிடுவதற்காக இவ்வினாப்பத்திரம் வடிவமைக்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(5) **ஆக்கபூர்வமான பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள்.**- தரப்பட்ட தலைப்புக்கள்/ மையக் கருத்துக்களிலிருந்து பரீட்சார்த்தியினால் தெரிவுசெய்யப்படும் தலைப்பு/ மையக்கருத்து என்பவற்றினூடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல், கோப்புப்படுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல் மற்றும் கற்பனை சக்தி என்பவற்றை அளவிடுவதோடு சிக்கலான பந்தியொன்று, ஆவண மொன்று அல்லது விஞ்ஞாபனமொன்றினை விளங்கிக்கொள்ளல் மற்றும் அதன் கருப்பொருளினை சொந்த வசன நடையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் மற்றும் சரியான முறையிலும் தெரிவிப்பதற்கான பரீட்சார்த்தியின் ஆற்றலை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2015, திசெம்பர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2016)**
OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF THE SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2014 (2016)

1. மொழி மூலம் :
   பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
   சிங்களம் - 2
   தமிழ் - 3
   ஆங்கிலம் - 4 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.)

2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :-----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) : -----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 பால் (ஆண் - 0, பெண் - 1) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.7 திருமணமானவரா? திருமணமாகாதவரா?
(திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.8 தேசிய இனம் (சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) : [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.10 பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

2.11 தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2016.02.15 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

2.12 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) பட்டம் பெற்ற திகதி :----.
   (ii) பல்கலைக்கழகம்/நிறுவகம் :----.
   (iii) பதிவிலக்கம் :----.
   (iv) உள்வாரி/வெளிவாரி :----.
   (v) பட்டம் :----.
   (vi) பாடங்கள் :----.
   (vii) வகுப்பு :----.
   (viii) மேல்/கீழ் :----.
   (ix) சுட்டிலக்கம் :----.
   (x) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

4. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டவும் :

| விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.) (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.) |
|---|

5. ***பரீட்சார்த்தியின் உறுதியுரை :***

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............................................ ஆந் திகதிய ................................ ....... ஆம் இலக்க பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைந் தொழுகி நடப்பேன் எனவும், இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் வெளிப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதி, ஒழுங்கு களுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :***

(வர்த்தமானி அறிவித்தலின் 8(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற .............................. (முழுப்பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ..................... ............ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(அலுவலக முத்திரை மூலம் அத்தாட்சிப்படுத்தவும்.)

7. ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

(அரச/ மாகாண அரச/ அரச கூட்டுத்தாபனங்களில் சேவை யாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .............................. இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................ ஆக சேவையாற்றுவதுடன், அவரின் விண்ணப்பப்படிவத்தினைப் பரிந்துரைத்து சமர்ப்பிக் கின்றேன். இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்படின் இந்நிறு வனத்தின் சேவையில் இருந்து விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :-----.
பெயர் :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

1-619

## சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

### வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா சேவை - வகுதி 2 சேவைத்தொகுதியின் (MN-01-2006A) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இந்த விளம்பரத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களைப் பயன் படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2016.02.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பதிவாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பப்படிவத்தின் 1 ஆம் இலக்கத்திலிருந்து 8 ஆம் இலக்கம் வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குகின்றவாறு தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை" என்று தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண் ணப்பப்படிவத்துடன் பெயர் மற்றும் சுய விலாசமிடப்பட்ட 35 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவில்லாத மற்றும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. ***பணியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :***

3.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனுமான தாகும். விதவைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும் ;

3.2 அரச சேவையின் நியமனங்கள் தொடர்பான தாபன விதிக்கோவையின் 2 ஆவது அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையிலான பிரிவுகளும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கடமைச் சட்டதிட்டங்களும் உரித்தாகும் ;

3.3 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக் கோவைகளின் நிபந்தனைகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் காலத்துக்குக்காலம் அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற ஏனைய சட்டதிட்டங் களுக்கும் கட்டளைகளுக்கும் இசைதல் வேண்டும்.

4. ***பொதுவான தகைமைகள் :***

4.1 இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;
4.2 நற்பண்புள்ள ஒருவராக இருத்தல் வேண்டும் ;
4.3 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கு கட்டுப்பட வேண்டியதுடன்

பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான உடல் உள தேர்ச்சியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

4.4 விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தில் வயதானது 18 இற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தலாகாது.

5. **கல்வித் தகைமைகள்**.- திறந்த ஆட்சேர்ப்பு :

(அ) தமிழ்/சிங்களம்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் இரு (2) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது (1) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

6. **தொழில் தகைமைகள்/அனுபவங்கள்**.- உரித்துடையதல்ல.

7. **தெரிவுசெய்யப்படும் முறைகள் :**

7.1 ***எழுத்துமூல போட்டிப் பரீட்சை :***

7.1.1 எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் நிபந்தனைகள்.- இதற்கான எழத்துமூலப் பரீட்சை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பொருட்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்/பதிவாளர் மூலம் நடாத்தப்படுவதுடன் அவர்களால் அறிவிக்கப்படும் திகதி ஒன்றில் பரீட்சை நடைபெறும். அவர்களால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் இசைதல் வேண்டும். பரீட்சையில் தோற்றுவதற்காக சகல விதத்திலும் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளதாக திருப்தியடையக்கூடிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் வழங்கப்படும்.

7.1.2 தகுதிகளையுடைய விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சைக்குத் தோன்றுவதுடன் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக்குறைந்தது 40% வீதமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7.1.3 எழுத்துமூலப் பரீட்சையின் பாடங்கள் மற்றும் உரிய ஏனைய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன :

| *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| (1) உளச் சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| (2) சமூக அபிவிருத்தி தொடர்பான பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

| *வினாத் தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| (1) உளச் சார்பு | இலக்கண, இலக்கிய எண்ணிக்கைகள் மற்றும் உருவ வடிவிலான சூழலமைவில் முன்வைக்கப்படும் வினாக்கள் தொடர்பில் விண்ணப்பதாரியின் தீர்மானங்களையும் துலக்கங்களையும் பரீட்சிப்பதன் ஊடாக விளங்கிக்கொள்ளும் திறமையினையும் அறிவை மட்டிடலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (2) சமூக அபிவிருத்தி தொடர்பான பொது அறிவு | கிராமிய மற்றும் தேசிய மட்டத்திலான பல்வேறு அமைப்புக்களிலும் எமது சமூகத்திலுள்ள சமூக, கலாசார, பொருளாதார மற்றும் ஏனைய சமூக அபிவிருத்திக்குரிய காரணிகள் தொடர்பில் விண்ணப்பதாரியிடமுள்ள அறிவு விளக்கம் என்பனவற்றினையும் பரீட்சிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |

7.2 ***ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :***

7.2.1 எழுத்துமூலப் பரீட்சையில் அதிக மொத்தப் புள்ளிகளைப் பெற்றுகச்கொண்ட முன்னுரிமை அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு மற்றும் சம அளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையினர் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவர். ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைப்புக் கிடைப்பது குறித்த பதவிக்குரிய ஆட்சேர்ப்பின் பொருட்டான தகுதியாகக் கருதப்பட மாட்டாது.

7.2.2 புள்ளிகள் வழங்கப்படும் முறைகள் கீழுள்ள பிரகாரமாகும் :

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்* | | *உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்து கொள்ளும் பொருட்டு கவனத்திற் கொள்ளப் படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் : | | | |
| பரீட்சை | புள்ளிகள் | | |
| க. பொ. த. (சா. த.) பரீட்சை | 12 | 30 | உரித்துடையதல்ல |

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | | உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு | தெரிவு செய்து கொள்ளும் பொருட்டு கவனத்திற் கொள்ளப் படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| க. பொ. த. (உ. த.) பரீட்சை | 18 | | |
| 2. அனுபவம் : பதவிக்குரிய துறை ஒன்றில் பெற்றுள்ள அனுபவங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப் படும். | | 50 | |
| 3. தொழில் தகைமைகள் : துறைசார்ந்த அரச மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரித்த நிறுவனம் ஒன்றில் கற்றுள்ள தொழில் பயிற்சி மற்றும் பாடநெறியின் பொருட்டு | | 15 | உரித்துடையதல்ல |
| 4. நேர்முகப் பரீட்சையின் போது வெளியிடப் படும் திறமைகள் | | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | | 100 | |

7.2.3 எழுத்துமூலப் பரீட்சை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கமைய கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தெரிவுசெய்யப்படுவர்.

8. **ஆட்சேர்த்துக்கொள்ளல்.**- மேலே 5 இன்கீழ் கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ள எழுத்துமூலப் பரீட்சை மற்றும் ஒழுங் கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைப்படி தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா சேவை - வகுதி 2 சேவைத் தொகுதியில் (MN-01-2006A) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரத்தில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையானது, தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, சேவைத் தேவை மற்றும் ஏனைய காரணங்களையும் கவனத்திற்கொண்டு வாழ்வின் எழுச்சி பணிப் பாளர் தலைமையதிபதியால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

9. **சம்பள அளவுத்திட்டம் :**

9.1 சம்பள குறியீட்டு இலக்கம் : MN-01-2006A

9.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040.

10. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணமானது 500 ரூபாவாகும். விண்ணப்பதாரிகள் மீளச்செலுத்தப்படாத 500 ரூபாவிற்கான பரீட்சைக் கட்டணத்தினை இலங்கை பூராகவும் அமைந்துள்ள எந்தவொரு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியொன்றில் செலுத்திப் பொற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படுகின்ற கட்டணமானது எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சையின் பொருட்டு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

11. **பரீட்சை நடைபெறும் இடங்கள்.**- பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் கீழே காட்டப்படுவதுடன் ஏதேனும் ஒரு நிலையத்தில் போதுமானளவு விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அவர்கள் அண்மிய பரீட்சை நிலையங்களுக்கு மாற்றப்படுவர் :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

12. எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் ஒரு பொய்யான தகவல்கள் இருப்பதன் காரணமாக அவர் தகுதியற்றவர் எனக் கருதப்படுவதுடன் தெரிவு செய்ததன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது தெரியவரின் அவரது பணி முடிவுறுத்தப்படும்.

13. **கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்.**- விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் பிரதானி ஒருவர்/ ஓய்வுபெற்ற பிரதானியொருவர், பிரிவின் கிராம அலுவலர் ஒருவர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி ஒருவர்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவராவது முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது 2,40,360 ரூபா அல்லது அதிலும் கூடிய வருடாந்த சம்பளத்தினைப் பெறுகின்ற அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரமான பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்திக்கொள்ளப்படல் வேண்டும். ஏற்கனவே அரச பணியில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவத்தினை நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். இங்கு குறிப்பிடப்படாத விடயங்களின் பொருட்டு தீர்மானம் எடுக்கும் அதிகாரமளிக்கப்பட்டவர் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் "பணிப்பாளர் தலைமையதிபதியாவார்".

சந்திரா விக்கிரமசிங்க,
பணிப்பாளர் தலைமையதிபதி.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்,
4 ஆம் மாடி, முதலாம் கட்டம்,
'செத்சிரிபாய',
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

[ ]
(அலுவலக பாவனைக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - S
தமிழ் - T [ ]

(உரிய ஆங்கில எழுத்தை நிரலில் எழுதவும்)

1. (i) முழுப்பெயர் :----.
   (ii) முதலெழுத்துடன் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.
   (iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :
   (i) தனிப்பட்ட முகவரி :----.
   (ii) தொலைபேசி இலக்கம் :----.
   (iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

3. பாலினம் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய நிரலில் அடையாளம் இடவும்.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

   (ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

6. திருமணமான/திருமணமாகாத நிலை :

| | |
|---|---|
| திருமணமானவர் | |
| திருமணமாகாதவர் | |

(உரிய நிரலில் அடையாளமிடவும்.)

7. க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரம் (தயவுசெய்து பிரதியை இணைக்கவும்) :
   (i) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
   (ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | .................. | .................. |
| (ii) | .................. | .................. |
| (iii) | .................. | .................. |
| (iv) | .................. | .................. |
| (v) | .................. | .................. |
| (vi) | .................. | .................. |
| (vii) | .................. | .................. |
| (viii) | .................. | .................. |
| (ix) | .................. | .................. |
| (x) | .................. | .................. |

8. க. பொ. த. (உ./தரம்) பரீட்சை தொடர்பான விபரம் (தயவுசெய்து பிரதியை இணைக்கவும்.) :
   (i) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
   (ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | .................. | .................. |
| (ii) | .................. | .................. |
| (iii) | .................. | .................. |
| (iv) | .................. | .................. |

9. பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| 500 ரூபாவிற்கான பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழராதவாறு இங்கு ஒட்டவும். |

10. விண்ணப்பதாரியின் கூற்று :
மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் நான் அறிந்தவகையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் இதில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தகவல்கள் பிழையானது மற்றும் பொய்யானதென கண்டுபிடிக்கப்பட்டால் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டமை தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் நான் நியமனத்தினைப் பெறுவதற்கு பொருத்தமற்றவர் எனவும், நியமனம் பெற்றதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால்

எவ்வித நட்டஈடுமின்றி எனது நியமனமானது செல்லுபடியற்ற தாக்குவதற்கு உட்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் : இவ்விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................... (முழுப்பெயர்) என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியுமெனவும் .................... ஆந் திகதி .............................. அவர் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

12. அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் :

இவ்விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ................ ................. தற்பொழுது இந்த அமைச்சு/ திணைக்களத்தில் ....................................... என்ற வகையில் நிரந்தரமாகக் கடமையில் ஈடுபடுவதாகவும் அவர் இப்பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் அறியத்தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

1-666

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.